உ

சிவமயம்.

குஹப்ரஹ்மணேநம :
திருச்சிற்றம்பலம்.

இரண்டாவது மண்டலமாகிய

# திருவலங்கற்றிரட்டு

## முதற்கண்டம்.*

### காப்பு.

*குறள்வெண்பா.*

**பொ**ன்னாரந் துன்னும் புயத்தானை மாமுகவன்
பின்னோ னிதற்கருள்காப் பே. 1

**கோ**ளில் புகழ்க்கயிலைக் கோன்முருகை யேத்தவவன்
தோளுங் கடம்புந் துணை. 2

**அ**ஞ்ஞுத்வம் வீடற் கலங்கற் றிரட்டாற்ற
மஞ்ஞையிவர் வோன்காக்க வந்து. 3

**வ**ள்ளல்சே யின்றாளை வாழ்த்தவருட் டெய்வானை
வள்ளியுங் காக்கவே வந்து. 4

**அ**யில்வேலன் மேனானு மாற்றுந் துதிக்கோர்
மயில்சேவ லுங்காக்க வந்து. 5

**சு**கநிலையைச் சூழ்ந்து சொலற்குச் சுரேசன்
மகிழ்வொடுங் காக்கவே வந்து. 6

---

* ***கண்டம்*** (வணூ०) = *கூறுபாடு; கூட்டமெனும் பொருள் பயக்கத்தக்க* (காணூ०) *காண்டம் என்பதற்கு இதுவேறாம்.*

**ந**ற்றா டொழக்கூட னாரிக் கிளமுருகாய்
உற்றோ னருள்வா னுவந்து. 7

**அ**ருளா ரடிபோற்று மன்பர்க் கருள்சேய்
அருளே நமக்காதிக் கம். 8

**ஒ**ப்புவமை யில்லாமெய் யுற்றவடி வேலரசிங்
கெப்படியும் வந்தாளு மே. 9

**கு**மரகுரு தானே கொடுக்குமென லங்கால்
குமரகுரு தாசன் குறிப்பு. 10

இசைத்தமிழிற் பாடக்கூடிய இம்முதற் கண்டமும், இயற்றமிழாயுள்ள இரண்டாங் கண்டமும் சம்பந்தத்தால் **திருவலங்கற்றிரட்டு** எனும் பெயர்பெற்றுள்ளன வென்பதை இக்கண்டத்தின் முதற்கண் இயற்றமிழைச் சார்ந்த இவ்வெண்பாக்கள் போந்து காட்டுவவாயினவே.